# INTERNATIONAL ASSOCIATION OF TAMIL JOURNALISTS
## சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம்

**P.O Box 54079, London SW20 9WR**


**London, 01.01.2008**

## புத்தாண்டுச்செய்தியும் வேண்டுகோளும்

மனிதஉரிமைகளையும், மனிதஉயிர்களையும் துச்சமாக கருதும் நாடாக இலங்கை இன்று இருந்து வருகின்றது. ஊடகத்துறை கொடுமையான அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு தொடர்ந்தும் உண்மைக்கு மாறன செய்திகளை வெளிநாடுகளுக்கு பரப்பி வருகின்றது.

"பயங்கரவாதத்தை" அடக்குகின்றோம் என்ற பெயரில் உலகநாடுகளை மிகச்சாதுரியமாக ஏமாற்றிவருகின்றது இலங்கை அரசு. உலக நாடுகளும் தமது பொருளாதார அரசியல் நலன்களின் அடிப்படையிலேயே இலங்கை நிலமையை கண்டும் காணாதது போல் மௌனமாக நோக்குகின்றன. மனிதநேய அமைப்புகளும், மனிதஉரிமை அமைப்புகளும் இலங்கையில் நடைபெறும் அவலங்களை, தமிழ் மக்கள்படும் துன்பதுயரங்களை பலமுறை அம்பலப்படுத்தியும் கூட இலங்கை அரசுக்கெதிராக எந்தவொரு நாடும் எதுவித நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. இலங்கையில் தமிழ்மக்களுக்கும், தமிழ் ஊடகங்களுக்கும் எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுவரும் வன்முறைகள் குறித்து உலகநாடுகள் மௌனப்பார்வையாளர்களாக இருப்பது ஏனோ?

இலங்கை அரசின் இன ஒழிப்பு நடவடிக்கைகளும், ஊடகங்களுக்கெதிரான செயற்பாடுகளும் உடனடியாக நிறுத்தப்பட்டு மனித உரிமைகள் பேணப்பட்டு பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக தமது பணியைச்செய்யும் சூழல் உருவாக்கப்படவேண்டுமென்பதை உலகநாடுகள் இலங்கை அரசுக்கு வலியுறுத்தவேண்டும். இலங்கை இராணுவமும் அதன் ஒட்டுக்குழுக்களும் அன்றாடம் தமிழ் மக்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக கொன்றுவரும் கொடுரங்களும் நிறுத்தப்படவேண்டுமென இலங்கை அரசுக்கு உலகநாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையும், ஐரோப்பிய ஒன்றியமும் தமிழ்மக்கள் படும் தாங்கொணா இன்னல்களை இனிமேலும் அலட்சியம் செய்யாது இலங்கை அரசுக்கெதிராக வழங்கிவரும் பொருளாதார ஆயுத உதவிகளை நிறுத்தி, தமிழ் மக்களின் உயிர்களையும், உரிமைகளையும் பாதுகாக்கும் ஒரு தீர்வுக்கு உடனடியாக வழிவகுக்கவேண்டுமென என சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் (IATAJ) கேட்டுக்கொள்கின்றது.

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்

திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம்
தலைவர்

President

Secretary


President:
Anandhi Suriyaprakasam
Tel: 00442085437226

Secretary:
Kugathasan Thambipillai
Tel: 004597250917

Website: http://www.iataj.org Mail: iataj@iataj.org